Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 01 [17-08-1993] செவ்வாய்க்கிழமை ஓசை 180

## ஒரு வருடம் சேவையாற்றிய பட்டதாரி பயிலுநருக்கு நிரந்தர நியமனம்

பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனமும் பட்டதாரிச் சம்பளமும் வழங்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. ஒரு வருடகால திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்த பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கே நிரந்தர நியமனமும் பட்டதாரிச் சம்பளமும் வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இதன்கீழ் அடுத்த ஆண்டில் 6000 பேருக்கு நிரந்தர நியமனம் கிடைக்கவுள்ளது. சிறிலங்கா ஜனாதிபதியின் உத்தரவின் கீழ் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்துள்ளார். 1989-ம் ஆண்டு நியமிக்கப்பட்ட 6000 பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் ஏற்கனவே சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பட்டதாரிச் சம்பளம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். குடாநாட்டின்மீது படையெடுப்பு

# யுத்த தயாரிப்பில் இராணுவம் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின்மீது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள சிறிலங்கா இராணுவம் திட்டமிட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது. தற்பொழுது இத்தாக்குதலுக்குரிய முன்னேற்பாட்டு நடவடிக்கையாக துருப்புகளையும், போர்த்தளபாடங்களையும் சேகரித்தும், வடக்கு நோக்கி நகர்த்தியும் வருவதாகவும் தெரியவருகின்றது.

மிகவிரைவில் குடாநாட்டின் மீது பாரிய இராணுவத் தாக்குதல் ஒன்றை நடத்த சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இதற்கேற்றவகையில் கடற்படைக் கப்பல்கள் மூலம் போர்த்தளபாடங்களும், துருப்புக்களும் வடக்குநோக்கி நகர்த்தப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை தாக்குதலுக்கான துருப்புகளை திரட்டும் பொருட்டு மன்னார் மாவட்டத்தில் இருபது மைல் நீளத்திற்கு ஒரு வேலியை அமைத்திருந்த இராணுவம் பின்வாங்கிச் சென்றுள்ளது. இதன் மூலம் குடாநாட்டின் மீதான தாக்குதலுக்கு இத் துருப்புகளைப் பயன்படுத்த இராணுவத் தரப்பு திட்டமிட்டுள்ளது.

மேலும் கிழக்கில் இருந்தும் குறிப்பிடக்கூடிய துருப்புகளை எடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது போல் தெரிகின்றது. இதற்காக அம்பாறை மாவட்டத்தில் கடமையில் இருந்த அதிரடிப்பொலிஸ் படைப் பிரிவுகளை விலக்கிக் கொண்டு அவ்விடத்திற்கு பொலிசாரை போட்டுள்ளதோடு அதிரடிப்படையினரை மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டுவிட்டு அங்கிருந்த (4ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலிப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நள்ளிரவு வேளை கிழக்குப்புற மக்கள் குடியிருப்புகளை நோக்கி அகோர எறிகணைத் தாக்குதல்களையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு 12.30 மணிமுதல் 1.00 மணிவரை தம்பாலை, இடைக்காடு, வல்லை பகுதி மக்கள் குடியிருப்புகளை நோக்கி மேற் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவு இராணுவம் நேற்று எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் யாழ். நகரின் கரையோரப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நிகழ்த்தினர்.

நேற்று மாலை 6-00 மணியளவில் மேற்படி பகுதிகளில் இருந்து ஏவப்பட்ட எறிகணைகள் யாழ். பண்ணை கரையோர பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

எனினும் இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை. (பா)

## விமானப்படை முகாமருகே வள்ளம் கரை ஒதுங்கியது

### பீதியால் படையினர் சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புவாவியில் மீன்பிடி வள்ளமொன்று அப்பகுதியில் அமைந்துள்ள விமானப்படை முகாமை நோக்கி கரை ஒதுங்கியதை அடுத்து சிறிலங்கா படையினர் அவ் வள்ளத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதனால் அப்படகில் இருந்த மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார். மற்றொரு மீனவர் கைதுசெய்யப்பட்டார். வள்ளமும் பலத்த சேதமடைந்துள்ளது.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது; மேற்படி வாவியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் இருவரும் வலையை வாவியில் கட்டிவிட்டு வள்ளத்திலேயே நித் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மாநகரசபை அலுவலகத்தை அகற்ற படையினர் உத்தரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இராணுவ உயர் அதிகாரிகளின் அலுவலகம் அருகே அமைந்துள்ள மட்டக்களப்பு மாநகரசபை அலுவலகத்தை உடனடியாக வேறிடத்திற்கு மாற்றுமாறு உத்தரவை இராணுவ அதிகாரிகள் பிறப்பித்துள்ளனர்.

மாநகரசபை அலுவலகத்தை உடனடியாக எங்கு மாற்றுவது எனப்புரியாது அதிகாரிகள் திண்டாடி வருகின்றனர்

## வலிகாமத்தில் இரவுநேர விமானநோட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படை வேவு விமானம் ஒன்று நேற்று இரவு வலிகாமப் பகுதியை வட்டமிட்டதால் மக்கள் கிலிகொண்டனர்.

நேற்றைய தினம் இரவு 9.45 மணியளவில் குடாநாட்டிற்குள் வந்த வேவு விமானம் ஒன்று நல்லூர் ஆலயத்தை மையமாகக் கொண்டு பல தடவைகள் வட்டமிட்டுச் சென்றது.

இதனால் தூக்கத்திலிருந்த மக்கள் விழித்தெழுந்து பாதுகாப்பு இடங்களை நாடினர். ஆலய வீதிகள் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததாலேயே விமானம் நோட்டமிட்டதாக தெரியவருகிறது.

## காவல் அதிகரிப்பாம்

மணலாறு, பதவியா, புல்மோட்டை பிரதேசங்களில் அமைந்திருக்கும் இராணுவ முகாம்களுக்கும் பொலிஸ் காவல் நிலையங்களுக்கும் பொலிஸ் நிலையங்களுக்கும் புலிகள் தாக்குதல் மேற்கொள் (4ஆம் பக்கம் பார்க்க)

## சன நெரிசலில்

## கடற்படை அதிகாரிகள் பதவிகளில் மாற்றம்

(கொழும்பு)

கடற்படையினரின் உயர் பீடங்களில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி கடற்படைத் தலைமையகத்தைச் சேர்ந்த கப்டன் சுனில் விஜேரத்னா வடபிராந்திய கடற்படை உதவித் தளபதியாக நியமிக் (4ஆம் பக்கம் பார்க்க)



பீதியால் படையினர் சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புவாவியில் மீன்பிடி வள்ளமொன்று அப்பகுதியில் அமைந்துள்ள (விமானப்படை முகாமை நோக்கி கரை ஒதுங்கியதை அடுத்து சிறிலங்கா படையினர் அவ் வள்ளத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதனால் அப் படகில் இருந்த மீனவர்ஒருவர் படுகாயமடைந்தார். மற்றொரு மீனவர் கைதுசெய்யப்பட்டார். வள்ளமும் பலத்த சேதமடைந்துள்ளது.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது; மேற்படி வாவியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் இருவரும் வலையை வாவியில் கட்டிவிட்டு வள்ளத்திலேயே நித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாநகரசபை அலுவலகத்தை அகற்ற படையினர் உத்தரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இராணுவ உயர் அதிகாரிகளின் அலுவலகம் அருகே அமைந்துள்ள மட்டக்களப்பு மாநகரசபை அலுவலகத்தை உடனடியாக வேறிடத்திற்கு அகற்றி விடுமாறு இராணுவம் உத்தரவிட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டே இந்த உத்தரவை இராணுவ அதிகாரிகள் பிறப்பித்துள்ளனர்.

மாநகரசபைஅலுவலகத்தை உடனடியாக எங்கு மாற்றுவது எனப்புரியாது அதிகாரிகள் திண்டாடி வருகின்றனர். பாதுகாப்பு சூனியவலயம் என்பதால் மட்டக்களப்பின் முக்கிய இடங்களான நீதிமன்றக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் ஊர்திப் பதிவு நான்காம் கட்டம் ஆரம்பம்

மோட்டார் ஊர்தி பதிவின் நான்காம் கட்டம் இன்று தொடக்கம் ஆரம்பித்திருப்பதாக மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத்தருகின்றனர்.

சங்கானை, சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் தங்கள் மோட்டார் ஊர்திகளை கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதிச்செயலகத்திற்கு எடுத்துச் சென்று 17-08-93 இல் இருந்து 27-08-93 வரையிலான காலப்பகுதிக்குள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

தடவைகள் வட்டமிட்டுச் சென்றது.

இதனால் தூக்கத்திலிருந்த மக்கள் விழித்தெழுந்து பாதுகாப்பு இடங்களை நாடினர். ஆலய வீதிகள் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததாலேயே விமானம் நோட்டமிட்டதாக தெரியவருகிறது.

## காவல் அதிகரிப்பாம்

மணலாறு, பதவியா, புல்மோட்டை பிரதேசங்களில் அமைந்திருக்கும் இராணுவ முகாம்களுக்கும் பொலிஸ் காவல் நிலையங்களுக்கும் பொலிஸ் நிலையங்களுக்கும் புலிகள் தாக்குதல் மேற்கொள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சன நெரிசலில் சிக்கினார்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் தேர்த் திருவிழாவிற்கு நேற்று பக்தர் கூட்டம் அதிகமாக இருந்த வேளை தேரின் வடத்தைப்பற்றி இழுக்க முற்பட்டவர்சனநெரிசலில் சிக்கி மிதிபட்டுள்ளார். செல்லத்துரை நித்தியானந்தம் (54 வயது)என்ற வயோதிபரே சன நெரிசலில் சிக்கி மிதிபட்டவராவார்.

இவரிற்கு நெஞ்சில் பலமான நோ ஏற்பட்டதால் உடனடியாக யாழ் பொதுவைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். [பா],[41]

தெரியவருகின்றது.

ஆதேவேளை தாக்குதலுக்கான துருப்புகளை திரட்டும் பொருட்டு மன்னார் மாவட் ... குறிப்பிடக்கூடிய துருப்புகளை எடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது போல் தெரிகின்றது. இதற்காக அம்பாறை மாவட்டத்தில் கடமை ... கடற்படையினரின் உயர் பீடங்களில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ... தலைமையகத்தைச் சேர்ந்த கப்டன் சுனில் விஜேரத்னா வடபிராந்திய கடற்படை உதவித் தளபதியாக நியமிக்

(4ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப்புலிகளால் நேற்று விடுவிக்கப்பட்ட போர்க்கைதியின் விடுதலை தொடர்பான பத்திரங்களை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி பீற்சுவிசரிடம் ஒப்படைப்பதை முதலாவது படத்திலும், விடுவிக்கப்பட்ட போர்க்கைதி, அவருடைய மனைவி ஆகியோரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## மன்னார் மாவட்டத்தில் 20 மைல் நீளமான இராணுவவேலி வாபஸ்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மேலும் பல மைல்கள் பிரதேசத்திலிருந்து இராணுவம் பின்வாங்கியுள்ளது. மாந்தைமுதல் நானாட்டான் வரையிலான 20 மைல் நீளமான பிரதேசத்தில் இராணுவ வேலியை அமைத்திருந்த படையினர் நேற்று முன்தினம் அப்பகுதியிலிருந்து முற்றாக வாபஸ் பெற்றனர்.

அடம்பன் முதல் உயிலங்குளம் பகுதிவரையிலிருந்த படையினர் முதற்கட்டமாக வெளியேறியிருந்தனர். நேற்று பிற்பகல் ஏனைய இடங்களிலிருந்தும் வெளியேறி முற்றாக படைகள் வாபஸ் பெற்றன. இப்பகுதிகளில் இராணுவம் மூன்றுக்குமதிகமான பிரதான முகாம்கள் ஆறுக்கும் அதிகமான மினிமுகாம்கள், 250 காவலரண்கள் ஆகியவற்றை அமைத்து இராணுவவேலி ஒன்றை அமைத்திருந்தனர்.

இப்பகுதிகளை படையினர் ஆக்கிரமித்ததால் 10,000 மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் வசித்து வந்தனர்.

## கட்டடங்களை தகர்த்த பின் இராணுவம் வெளியேறியது

### மன்னார் சிறப்புத் தளபதி தெரிவிப்பு

(மன்னார்)

விடுதலைப் புலிகள் தமது பகுதிகளினுள் ஊடுருவி தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தினால் சிறிலங்கா இராணுவத்தினர் மன்னாரில் தாம் கைப்பற்றிய இடங்களிலிருந்து தற்போது பின்வாங்கிச் செல்வதாக மன்னார் சிறப்புத் தளபதி ஜான் புலிகளின் குரல் வானொலிக்கு தெரிவித்தார்.

இராணுவம் பின்வாங்கி செல்வதால் பெருமளவு பயிர்ச்செய்கை நிலங்கள் விடுபடுகின்றன. எனினும் இராணுவம் வாபஸாகும்போது இங்குள்ள சகல கட்டடங்களையும் தகர்த்துவிட்டு சென்றுள்ளனர். அடம்பன், கட்டைக்காடு, இத்திக்கண்டல். கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. அடம்பனில் பாரிய நீர் தாங்கி கண்ணிவெடி மூலம் தகர்க்கப்பட்டுள்ளது. இந் நிலையில் இங்கு மீண்டும் குடியேறும் மக்கள் குடிசைகளை அமைத்தே தங்க முடியும் என ஜான் தெரிவித்தார்.

## உடைமைகளை பெறலாம்

(நமது நிருபர்)

கிளாலி கடற்பரப்பில் கடந்த 10ஆம் திகதி நிகழ்ந்த படகு விபத்தில் சிக்கி உயிர் நீத்த மக்களின் சொத்துடைமைகள் கிளாலி படகுச் சேவைக் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. உறவினர்கள் அவற்றை அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## மனிதநேய அடிப்படையில் தலைவரால் கைதி விடுதலை

(யாழ்ப்பாணம்)

தேசியத் தலைவர் பிரபாகரனின் விசேட பணிப்பின் பேரில் விடுதலைப் புலிகளின் காவலில் இருந்த யுத்தக்கைதி ஒருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டார். மனிதாபிமான அடிப்படையில் தலைவர் இம் முடிவை எடுத்தார்.

நேற்று விடுதலையான கைதி மாத்தளையை சேர்ந்த எல். டி. எஸ் சி பெரேரா. இவரது மனைவியான சுனித்திரா தாய்மை அடைந்திருப்பதாலும் தனது கணவரை விட்டுச்செல்ல மறுத்து குடும்ப பிரச்சினைகள் குறித்து தலைவருக்கு கடிதம் எழுதி காருண்யம் காட்டுமாறு வேண்டிக் கொண்டதாலும் மனிதாபிமான அடிப்படையில் இப் போர்க் கைதியை விடுவிக்க தலைவர் பணித்தார்.

விடுவிக்கப்பட்ட இவரை நேற்று மாலை 3. 30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் வைத்து தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன் இவரை உத்தியோகபூர்வமாக சர்வதேச செஞ்சிலுவை சங்க யாழ். வதிவிட பிரதிநிதி சுவிட்ஸரிடம் ஒப்படைத்தார். விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதியுடன் இவரது மனைவியும் விடுதலைப் புலிகளின் பாதுகாப்புடன் பருத்தித்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர், அங்கிருந்து இருவரும் கப்பல் மூலம் காங்கேசன்துறை சென்று பலாலி முகாமை சென்றடைந்தனர்.

நேற்றிரவை பலாலி முகாமில் கழித்த இவர்கள் இன்று காலை விமான மூலம் கொழும்பு புறப்படுவர் எனத் தெரியவருகிறது.

## பிரபாவின் கருணையால் எனக்கு விடுதலை கிடைத்தது

### விருவிக்கப்பட்ட கைதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமது விடுதலை, தலைவர் வே. பிரபாகரனின் கருணையாலும் மனிதநேயத்தினாலும் கிடைத்தது என நேற்று தலைவரால் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட போர்க் கைதியான பெரேரா புலிகளின் குரல் வானொலிக்குத் தெரிவித்தார்.

தம்மை விடுவித்தமைக்காக புலிகள் இயக்கத் தலைவருக்கு தாம் நன்றி கூறுவதாகவும் புலிகளின்போராட்டம்வெற்றி பெற ஆண்டவனை வேண்டுவதாகவும் அவர் மேலும் கூறினார். தாம்கொழும்பு சென்றதும் ஏனைய 32கைதிகளையும் விடுவிப்பது தொடர்பாக நடவடிக்கையில் ஈடுபடப் போவதாகவும், தாம் ஒரு கிறிஸ்தவன் என்றரீதியில் இதுகுறித்து ஆயர்களுடனும் பேசப்போவதாகவும் பெரேரா கூறினார்.

இவர் பருத்தித்துறை துறைமுகத்தில்வைத்து எமது நெல்லியடி செய்தியாளருக்கு "கடந்த மூன்றுவருடங்களாக புலிகளின் பாதுகாப்பிலிருந்த யுத்தக் கைதியாகிய என்னை புலிகள் சகோதர பாசத்துடன், பாது

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**காணி விற்பனைக்கு**

ஒட்டுமடம், சந்தி அராலி றோட் அலுமினியம் பற்றறிக்கு அருகாமையில் 1¼ பரப்புக் காணி வீட்டுடன் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: யேசுதாசன், நம்3, முதலாம் ஒழுங்கை, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (5695)

**தவறிவிட்டது**

29 7 93 இரவு அல்லிப்பளை இறங்கு துறையில் இருந்து பஸ் நிலையத்திற்கு செல்லுகையில் பிரயாணப்பை (சொக்கிலேற் நிற கிட்பாக்) தவறிவிட்டது அதனுள் முக்கிய ஆவணங்கள் உள்ளதால் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். க. கிருபாகரன் இல 42, செட்டித்தெரு நல்லூர், யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். (5675)

**ஸ்ரீகாந்த் புத்தகசாலை**

இந்திய நாவல்கள், டிக்செனெறிகள், இலங்கை வெளியீடுகள் ஆங்கில தமிழ் சொற்களஞ்சியம், (மற்றாஸ் டிக்செனெறி) சிவா இன்டஸ்றீஸ் வெளியீடுகளும் அருள் உரை ஆகியவை. நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீகாந்த் புத்தகசாலை நல்லூர். (சி-7134)

**காணவில்லை**

வெள்ளைநிறபெம்பேரியன் ஆண் நாய் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் காணவில்லை. பிடித்து தருபவருக்கு சன்மானம் தரப்படும். R S K FARM. MURUCAPATHY, UDUVIL. (5699)

**தவறிவிட்டது**

10/08/93 இரவு அல்லிப்பளையில் வள்ளத்திற்குப் போகும்போது எனது பிரயாணப்பை தவறிவிட்டது அதனுள் மிகவும் முக்கிய ஆவணங்கள் இருப்பதால் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்திற்கு ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். டாக்டர். ம. சிற்றம்பலம் பெரியரசடி, சாவகச்சேரி. (5705)

**COMPUTER**
**கல்வி**

G.C.E. A/L பரீட்சை

## கிருமிநாசினி அருந்தி குடும்பஸ்தர் தற்கொலை

(தென்மராட்சி)

குடும்பத் தகராறு காரணமாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

கொடிகாமம் மந்துவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி ஜோன் செல்வராசா 25 வயது) என்பவர் தோட்டத்தில் இருந்த கிருமிநாசினி மருந்தை எடுத்து குடித்துவிட்டு வீட்டாருக்கு மருந்து குடித்துவிட்டதாக கூறிவிட்டு மயங்கி விழுந்துவிட்டார். இவரை உடன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றும் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.

இவரது மரணம் தொடர்பாக விசாரணையை மேற்கொண்ட சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நதர்மேந்திரன் தற்கொலை என தீர்ப்பளித்தார். (86)

## 1-ம் ஆண்டு நினைவு



மலர்வு:
11-08-1972

வீரச்சாவு:
28-08-1992

**லெப். மன்றவாணன்**
(கதிர்காம வேலன் ஸ்ரீகாந்தன்)
திதி - 17 08-93

தேசத்தின் எல்லையை குறித்துக்காட்ட
தேசத்தின் குருதியை சொரிந்தவனே
பாசம் எம் நெஞ்சை பரதவிக்கச் செய்யும்
நேசித்த எண்ணங்கள் வளர வாழ்கின்றோம்

மீசாலைவடக்கு,
வேம்பிராய்.

அம்மா, சகோதர,
சகோதரிகள், நண்பர்கள்

[5676]

நாவிற்கு நற்சுவை வழங்கும்

**சுவையருவி**

நல்லூர் உற்சவ இசை விழாவில்
செவிக்கு இன்சுவை வழங்கும்
யாழோசை மன்றத்தை வாழ்த்துகின்றது
இன்றைய நிகழ்வுகள்
இடம்:- நலலை ஆதீன மண்டபம்
★ மாலை 6.00மணி - 6.30மணி
ஈழத்தேச வாத்திய இசை
(யாழோசை மாணவர்கள்)

| | |
|---|---|
| த. ஜெயமாலா | புல்லாங்குழல் |
| சி. தர்ஷினி | புல்லாங்குழல் |
| ப. சசிகலா | வயலின் |
| சி. அன்பரசி | வயலின் |
| ம. கௌரி | வயலின் |
| த. நாகேஸ்வரி | வயலின் |

## பிரச்சினை இல்லாத நாடு இன்று உலகத்தில் இல்லை

ஜெர்மன் தூதுவர்

(அக்கரைப்பற்று)

இன்று பிரச்சினைகள் இல்லாத நாடுகளே கிடையாது. பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அவற்றை சமரசமாகத் தீர்த்து வைத்துக் கொள்ள வேண்டியது தான் இன்றுள்ள முக்கிய பிரச்சினையாகும் என்று கொழும்பிலுள்ள ஜெர்மன் அரசின் தூதுவர் பிராங்குலேஸ் தெரிவித்தார்.

மருதமுனை அல் - மனார் வித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட அவர் அங்கு பேசுகையில் மேலும், சொந்த நலன்களுக்காக இனவாதப் பூசல்களை ஏற்படுத்தக் கூடாது. ஜெர்மனியில் கூட, இரண்டு மில்லியன் பேர் தொழில் வாய்ப்புக்கள் இல்லாது இருக்கின்றார்கள் கிழக்கு ஜெர்மனியில் மிக மோசமான ஏழைகள் வாழ்கிறார்கள். அவர்களுக்குத் தாயரிப்பு உதவியாக மாதாந்தம் பணம் வழங்கப்படுகிறது அவற்றுக்கு மத்தியில்தான் கஷ்டமடையும் நாடுகளுக்கும் உதவிகள் வழங்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

**சலுகை விலையில் நூல் விற்பனை**

நல்லைக்குமரன் மலர் உற்சவ காலத்தில் முருகன் அடியார்கள் பெறுவதற்கு ஊக்கம் கொடுக்கும்வகையில் நேற்று முதல் நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை நூறு ரூபாவிற்கு விற்பனை செய்யபபடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது நல்லூர் கந்தன் ஆலய சுற்றாடலிலுள்ள அனைத்து விற்பனை நிலையங்களிலும் இம் மலர் விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

## தும்புத் தொழிற்சாலையில் சிங்கள மீனவர் தங்க வசதி

தொழிலின்றி தமிழ் யுவதிகள் அவதி

(வாழைச்சேனை)

கல்குடா பகுதியில் இயங்கி வந்த தும்புத் தொழிற்சாலையில் கல்குடா பகுதிக்கு வந்த சிங்கள மீனவர்கள் தங்க வைக்கப்பட்டிருப்பதால் தொழிற்சாலை இயங்க முடியாத நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கயிறு, தும்புத்தடி, துடைப்பங்கள் போன்ற நுகர்பொருள்களை உற்பத்தி செய்து வந்த இத் தொழிற்சாலையில் 25க்கும் மேற்பட்ட தமிழ் யுவதிகள் பணியாற்றி வந்தனர்

கடந்த பல வருடங்களாக தொழில் செய்து வந்த இந்த யுவதிகளுக்கு நாளாந்த வேலைக்கேற்ற வருமானமே வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இங்கு தங்கவைக்கப்பட்டுள்ள சிங்கள மீனவர்களை வேறு இடங்களுக்கு மாற்று மாறவிடுக்கப்பட்ட கோரிக்கை எதையும்சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லையாம்.

**54-வது ஆண்டு நிறைவு விழா**

(மருதனாமடம்)

மருதனாமடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் 54-வது ஆண்டு நிறைவு விழா எதிர் வரும் சனி கிழமையன்று நடைபெறவுள்ளது.

காலையில் பரிசுத்த நற்கருணை ஆராதனையும், அதனைத் தொடர்ந்து திருமுழுக்கு ஆராதனையும், நன்றி செலுத்தும் ஆராதனையும் இடம்பெறும். பிற்பகலில் பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

## மேலும் 25 குடும்பங்கள் மட்டக்களப்பு சென்றனர்

கொழும்பு மாணிக்கப் பிள்ளையார் கோவில் அகதிகள் முகாமில் தங்கியிருந்த தமிழ் அகதிகளில் மேலும் இருபத்தைந்து குடும்பங்கள் மட்டக்களப்பு நாவலடி அகதி முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இருபத்தைந்து குடும்பங்களைச் சேர்ந்த 79 பேரும் கடந்த சனிக்கிழமையன்று மட்டக்களப்புக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

கொழும்பு மாணிக்கப் பிள்ளையார் முகாமிலிருந்து 150 குடும்பங்கள் மட்டக்களப்பு வருவர் என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதும் 25 குடும்பங்கள் மட்டுமே மீளச் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது

## லக்கி ஸ்டார் சுரண்டல் புதிய லொத்தர் அறிமுகம்

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அரியாலை புதுமலர்கள் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி சுற்றோவம் உதயதாரகை விளையாட்டரங்கில் பாலர் பாடசாலை வளர்ச்சிச் சங்கத் தலைவி திருமதி தே நந்தபாலன்தலைமையில் நடைபெற்றது. (25)

## 4-ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
22. 08. 1967

வீரச்சாவு
17. 08. 1989

**வீரவேங்கை அன்ரன்**
(செந்தில்நாயகம் மகேந்திரா)
(இந்தியப்படையின் சுற்றி வளைப்பின்போது வீரச்சாவடைந்தார்)

ஈரிரண்டு வருடங்கள் நகர்ந்துவிட்டன.
எண்ணமதில் உன் நினைவலைகள் வாட்டுகின்றன.
தமிழீழ இலட்சியத்தின் விடியல்கள் மிளிர்கின்றன.
தாயக விடியலுக்காக களத்தினிலே போராடும்
வேங்கைகளின் இலட்சியம் ஈடேற பிரார்த்திக்கின்றோம்

குருக்கள் ஒழுங்கை,
கோப்பாய் வடக்கு

திரு திருமதி ஆனந்தராஜா
பபாமாமி குடும்பத்தினர்

(சி- 7191)

## நினைவு கூருகின்றோம்... 1993-08-17

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை- துவரங்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் ஊர்காவல்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது படுகொலை செய்யப்பட்ட 24 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு மன்னார் - தள்ளாடிச் சந்தியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் சிற்றூர்தியிலிருந்து இறக்கப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் காணாமல் போன நாட்டுப்பற்றாளரான-
**குஞ்சு** (கனகரத்தினம் சதானந்தன் - புத்துவெட்டுவான் - கிளிநொச்சி)

மற்றும் இதே சம்பவத்தில் இவருடன் காணாமல் போன 04 தமிழிளைஞர்கள்.

1989ஆம் ஆண்டு பளை - வேம்பொடுகேணிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
**கப்டன் சிவா** (கணபதிப்பிள்ளை செல்லத்துரை - எழுதுமட்டுவாள் - பளை)
**அன்ரன்** (செந்தில்நாயகம் மகேந்திரா - கோப்பாய் வடக்கு - யாழ்)

மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் இந்தியப்

ஆண் நாய் கடந்த வெள்ளிக் கிழமை தொடக்கம் காண வில்லை. பிடித்து தருபவருக்கு சன்மானம் தரப்படும். R S K FARM. MURUCAPATHY, UDUVIL. (5699)


### தவறிவிட்டது

10/08/93 இரவு அல்லிப்பளையில் வள்ளத்திற்குப் போகும்போது எனது பிரயாணப்பை தவறிவிட்டது அதனுள் மிகவும் முக்கிய ஆவணங்கள் இருப்பதால் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்திற்கு ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். டாக்டர். ம. சிற்றம்பலம் பெரியரசடி, சாவகச்சேரி. (5705)



## COMPUTER
கல்வி

G.C.E. A/L பரீட்சை முடிந்த பின் உங்களது நேரத்தை, வாழ்வை வளம் பெறச் செய்யும் தொழிற்கல்வி ஒன்றினைக் கற்பதற்காகச் செலவிட்டுப் பயன் பெறுங்கள்.

BASIC LOTUS,
SHORTHAND
&
TYPING
ஆகிய COURSES
18. 08. 93
ஆரம்பமாகின்றன.

For details
School of Business
Administration
16, 3rd CROSS STREET JAFFNA
(சி-7205)


மீசாலைவடக்கு,
வேம்பிராய்.

அம்மா, சகோதர,
சகோதரிகள், நண்பர்கள்


நாவிற்கு நற்சுவை வழங்கும்

## சுவையருவி

நல்லூர் உற்சவ இசை விழாவில்
செவிக்கு இன்சுவை வழங்கும்
யாழோசை மன்றத்தை வழ்த்துகின்றது
இன்றைய நிகழ்வுகள்
இடம்:- நலலை ஆதீன மண்டபம்

★ மாலை 6. 00மணி - 6. 30மணி
கீழைத்தேச வாத்திய இசை
(யாழோசை மாணவர்கள்)

| | |
|---|---|
| த. ஜெயமாலா | புல்லாங்குழல் |
| சி. தர்ஷினி | புல்லாங்குழல் |
| ப. சசிகலா | வயலின் |
| சி. அன்பரசி | வயலின் |
| ம. கௌரி | வயலின் |
| த. நாகேஸ்வரி | வயலின் |
| தி. குமரன் | வயலின் |
| க. முருகையா | மிருதங்கம் |

★ 6 30 - 6 45 மணி உரைகள்
சிறப்புரை திருமதி ஜெகதீசன்
(மாதர் மன்றத் தலைவி)
பிரதம விருந்தினர் உரை திரு இ மகேந்திரன்
(அதிபர் கொக்குவில் இந்துக்கல்லூரி)

★ 6 45 - 7. 30மணி கிற்றார் இசை

| | |
|---|---|
| ச. ஆனந்தி | கிற்றார் |
| எஸ் கமலதாஸ் | மிருதங்கம் |
| க. பிரபாகரன் | தபேலா |

★ 7 30 - 8 30 மணி வயலின் சோலோ

| | |
|---|---|
| பா. கண்ணன் | வயலின் |
| சி. துரைராஜா | மிருதங்கம் |
| க முருகையா | தபேலா |
| எஸ் ஜெயா | தவில் |

விழா தொகுப்பு:- குணா
க சிவசுப்பிரமணியம்
நிர்வாக உதவியாளர்
(சி-7206)


தொழில் செய்து வந்த இந்த யுவதிகளுக்கு நாளாந்த வேலைக்கேற்ற வருமானமே வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இங்கு தங்க வைக்கப்பட்டுள்ள சிங்கள மீனவர்களை கருணை ஆராதனையும், அதனைத் தொடர்ந்து திருமுழுக்கு ஆராதனையும், நன்றி செலுத்தும் ஆராதனையும் இடம்பெறும். பிற்பகலில் பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

## மேலும் 25 குடும்பங்கள் மட்டக்களப்பு சென்றனர்

கொழும்பு மாணிக்கப் பிள்ளையார் கோவில் அகதிகள் முகாமில் தங்கியிருந்த தமிழ் அகதிகளில் மேலும் இருபத்தைந்து குடும்பங்கள் மட்டக்களப்பு நாவலடி அகதி முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இருபத்தைந்து குடும்பங்களைச் சேர்ந்த 79 பேரும் கடந்த சனிக்கிழமையன்று மட்டக்களப்புக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

கொழும்பு மாணிக்கப் பிள்ளையார் முகாமிலிருந்து 150 குடும்பங்கள் மட்டக்களப்பு வருவர் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும் 25 குடும்பங்கள் மட்டுமே மீளச் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது

## லக்கி ஸ்டார் சுரண்டல் புதிய லொத்தர் அறிமுகம்

செவன செயலகம் 'லக்கி ஸ்டார்' என்ற பெயரில் புதிய அதிர்ஷ்டலாபச்சீட்டு ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப்புதிய சுரண்டல் அதிர்ஷ்டச் சீட்டு மூலம் இரண்டு கோடியே நாற்பது லட்சம் ரூபா பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது, சுமார் ஐம்பது லட்சம் சீட்டுகள் விற்பனைக்காக விடப்பட்டுள்ளன.


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் அக்கினோ
(செல்வி கலைவாணி இராசரத்தினம்)

தாயின் மடியில்: 26. 07. 1968
தாயக மண்ணில்: 08. 08. 1991
திதி: 17. 08. 1993

காவியம் படைத்துக் களம்பல கண்டஎம் அக்கினோவே
ஆவியி லிருந்தும் அருந்தமி ழீழங்கண் டகமகிழ்வேன்
மேவிய கல்வியும் மிக்கநற் செல்வமும் வெறுத்தகன்று
ஓவிய வேங்கையாய் உற்றனை வீரமிகும் மரணமன்றே

இளமை பசுமை இலங்கும் கலைவாணி இவ்வுலகில்
தளிராகிப் பூவாகிக் காயாகிக் கனியாய் விளங்குமென்ற
அளவிலெம் கற்பனையை அடித்து நூறாக்கி வீரமரணம்
தழுவிய வேங்கையின் தாள்மீதெம கண்ணீர் மலர்உறுமே

17 08 1993 செவ்வாய்க்கிழமை (இன்று) எமதில்லத்தில் நடைபெறும் அன்னாரது நினைவஞ்சலி நிகழ்ச்சியில் பங்குபற்றி ஏகுமாறு சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

"கலா பவனம்"
கைதடி - நுணாவில்,
சாவகச்சேரி.

– குடும்பத்தினர்

(5701)



## 1993-08-17

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை- துவரங்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் ஊர்காவல்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது படுகொலை செய்யப்பட்ட 24 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு மன்னார் - தள்ளாடிச் சந்தியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் சிற்றூர்தியிலிருந்து இறக்கப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் காணாமல் போன நாட்டுப்பற்றாளரான-
**குஞ்சு** (கனகரத்தினம் சதானந்தன் - புத்துவெட்டுவான் - கிளிநொச்சி)

மற்றும் இதே சம்பவத்தில் இவருடன் காணாமல் போன 04 தமிழிளைஞர்கள்.

1989ஆம் ஆண்டு பளை - வேம்பொடுகேணிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
**கப்டன் சிவா** (கணபதிப்பிள்ளை செல்லத்துரை - எழுதுமட்டுவாள் - பளை)
**அன்ரன்** (செந்தில்நாயகம் மகேந்திரா - கோப்பாய் வடக்கு - யாழ்)

மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழ் குழந்தைகள்.

மாத்தளையில் ஜே வி பி. இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட உக்குவலையைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன். யாழ்- கரவெட்டி வதிரிச்சந்தியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு அம்பாறை - வீரமுனைக் கிராமத்தில் சிறிலங்கா ஊர்காவல்படையினர் மற்றும் ஜிகாத் குழுவினரால் படுகொலை செய்யப்பட்டகுழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட 97 தமிழர்கள்.

சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 04-ம் குடியிருப்பு மத்தியமுகாமைச் சேர்ந்த 02 தமிழ் விவசாயிகள்.

இயக்கச்சியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

எழுதுமட்டுவாளில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட யாழ்- குடும்பக்கன்னியர் மடவித்தியாலய மாணவி, அவரது சகோதரியான மற்றுமொரு இளம்பெண்.

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரசாவெய்திய-
**மூர்த்தி** (விநாயகமூர்த்தி இராஜேஸ்வரன் - 3-ம்வட்டாரம், முள்ளியவளை - மணலாறு)

அம்பாறையில் தேசவிரோத சக்திகளினால் அடித்துக் கொல்லப்பட்ட 13-ம் கிராமத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1992ஆம் ஆண்டு மட்டு - வாழைச்சேனை - புதுக்குடியிருப்பில் சிறிலங்காக் காவல் படையினர் மற்றும் தேசவிரோதசக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-
**2-ம லெப். ரதீஸ் நதீஸ்** (தீரக்குட்டி சுதாகரன்- கோளாவில் வடக்கு, அக்கரைபபற்று - அம்பாறை)

இதே சம்பவத்தில் கொல்லப்பட்ட ஆதரவாளர்-
(அழகையா ஜீவானந்தம் - மாங்கேணி-மட்டு)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவம் மற்றும் தேசவிரோத சக்திகள் சேர்ந்து மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் கொல்லப்பட்ட புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி 7165)



உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக ஆண்டு ஆவணி 4ஆம் நாள் (20 08 93) வெள்ளிக்கிழமை உத்தர நட்சத்திரமும் கன்னி லக்கினமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 8 03 மணிமுதல் 9. 04 மணிக்குள் வரும் சுபவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறைச் செல்வன்
**கணேசலிங்கம்**
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறைச் செல்வி
**ஜெயந்தி**
அவர்களுக்கும்

கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நடைபெற இருக்கும் இத்திருமணத்திற்கு தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வந்திருந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

திருமதி ச. அப்புலிங்கம்
விததனை,
வல்வெட டித்துறை.

திருமதி சீ சண்முகநாதன்
ஏ ஜீ ஏ ஒழுங்கை,
மானாங்காணை, வல்வெட்டித்துறை.

இல. 69. பாபர் வீதி. கொழும்பு - 13.
இருவீட்டாரின் அன்பு அழைப்பு தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை.

(5702)

**சிந்தனைக்கு**

செருக்கு மிக்க செயல்வீரர்களே!
இதை நன்றாக குறித்துக் கொள்ளுங்கள்.
சிந்தனையாளருக்கு கட்டுப்பட்டு உங்களை
அறியாமல் இயங்கும் கருவிகள்தான் நீங்கள்
– ஹைன்ரீஷ் ஹைனெ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

# இலங்கைத்தீவில் பிரிவினை நெருங்கிவிட்டது

# 120 மனித உரிமை அமைப்புக்கள் ஊர்ஜிதம்

## வியன்னா மாநாட்டில் அறிக்கை சமர்ப்பிப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்திற்கு இணங்க ஆஸ்திரிய நாட்டின் தலைநகரான வியன்னாவில் யூன் மாதம் 14-ம் திகதி தொடக்கம் 25-ம் திகதி வரை உலகம் மனித உரிமைகள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாடு ஈரான் நாட்டில் 1968-ம் ஆண்டு முதன் முதலில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டிற்கு பின்னராக 25-வது ஆண்டில் நடைபெற்றது. 21-வது நூற்றாண்டினுள் நுழைகின்ற இக்கால கட்டத்தில், மனித உரிமைகள் பற்றிக் கணிப்பிடவும், நடைமுறையில் உள்ள சட்டவரையறைகள் போதுமா எனவும், புதிய வரையறைகள் தேவையா எனவும், ஐக்கிய நாடுகள் சபைக்கு பரிந்துரை வழங்குவதற்குமுரிய மாநாடாக இது அமைந்தது. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களை சர்வதேசச் சட்ட வரையறையினுள் அடக்க வேண்டிய தேவையே இம்மாநாட்டைக் கூட்டுவதற்கேதுவான உந்து சக்தியாக இருந்தது.

அரச பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என்ற ரீதியில் 6000க்கும் அதிகமானோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர். உலக நாடுகளின் அரச பிரதிநிதிகள் முக்கிய பங்கு வகிக்க ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார, சமூக அமைப்பில் அங்கம் வகிக்கும் சர்வதேச அரச சார்பற்ற மனித உரிமை நிறுவனங்கள் மாத்திரமல்லாமல், பிராந்திய அடிப்படையிலான மனித உரிமை நிறுவனங்களும் நூற்றுக்கணக்கில் பங்கு கொண்டன.

அம் மாநாட்டில் கலந்து கொண்ட விடுதலைப்புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு லோறன்ஸ் திலகர் அவர்கள் வியன்னா சர்வதேச மையத்தில் (இம் மையத்தில் தான் மனித உரிமைகள் மாநாடு நடைபெற்றது) நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் "தமிழ்த் தேசியம் நிலை பெற்றுவிட்டது. அது முன் நோக்கித்தான் செல்லும் வரலாறு மீண்டும் மீண்டும் அரங்கேறலாம். ஆனால், வரலாற்றை பின் நோக்கி நகர்த்த முடியாது" என்று தெரிவித்ததோடு 45 வருடகால சிங்கள ஆட்சியாளர்களின் தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்குமுறை, இனப்படுகொலை என்ற வடிவத்தை அடைந்து தொடர்ந்து இடம் பெற்று வருவதை எடுத்துக் காட்டினார். பொருளாதார தடை, குடியேற்றங்கள், கல்வியில் தரப்படுத்தல், மொழிப் புறக்கணிப்பு, படுகொலைகள், பொதுமக்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள போர் என்ற ரீதியில் இனப்படுகொலை தற்போது இடம் பெறுவதைச் சுட்டிக் காட்டினார். விடுதலைப்புலிகள், சமாதான ரீதியாக பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினையைத் தீர்வுக்கு கொண்டுவருவதற்கு, எப்பொழுதும் தயாராக இருப்பதாவும் அப்பத்திரிகை மாநாட்டில் தெரிவித்தார்.

மனித உரிமைகளுக்கான 'தமிழர் மையம்' என்ற அமைப்பு பெரிய அளவிலானதும், நிலைமையை விஸ்தாரமாக சித்திரிக்கக் கூடியதும், உணர்வைத் தூண்டக் கூடியதுமான கண்காட்சி ஒன்றையும் நடத்தியது. தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினை குறித்து விபரிக்கின்ற ஏராளமான நூல்களும், பிரசுரங்களும், படுகொலைப் படங்களும் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இக் கண்காட்சி ஆயிரக்கணக்கான மக்களால் பார்வையிடப்பட்டதோடு, பலரை நிலைகுலைய வைத்து அழ வைத்தது. கெனியா நாட்டு மனித உரிமை அமைப்பின் பெண் பிரதிநிதி ஒருவர் விம்மி விம்மி அழுத காட்சி அனைவரையும் கலங்க வைத்தது. இக்கண்காட்சி எழுப்பிய தாக்கம் சிறிலங்கா அரச பிரதிநிதிகளையும் அதற்குத் தலைமை தாங்கிய வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்காவையும் கண்காட்சியை வந்து பார்க்குமாறு செய்தது இக்கண்காட்சியானது. அவுஸ்திரிய தொலைக்காட்சி நிறுவனத்தால் படம் பிடிக்கப்பட்டு, சர்வதேச பார்வைக்கு வழங்கப்பட்டதோடு இப்படுகொலைகள் குறித்தகேள்விக்கணையையும் ராஜாங்க அமைச்சரிடம் தொலைக்காட்சி நிறுவனத்தால் தொடுக்கவைத்தது அமைச்சர், அரசாங்கப் படுகொலைகளை ஒத்துக் கொண்டதோடு, நிலைமை சீர்திருந்தி வருவதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச கல்வி நிறுவனத்தின் சார்பில் கலந்துகொண்ட திரு' அன்ரன் பொன்ராஜா அவர்கள் 24-ம் திகதி மாநாட்டில் அறிக்கை வாசித்தபொழுதுசுயநிர்ணயஉரிமைத்தத்துவம் இன்றைய உலகில் பெரும் சவாலை எதிர்கொண்டு வருவதாகவும், அவ் உரிமையை சர்வதேசச்சட்ட வரையறையினுள் நெறிப்படுத்த, அரசாங்கங்கள் மத்தியில் விருப்பமின்மை காணப்படுவதாகவும் கூறினார் ஸ்ரீலங்கா அரச பிரதிநிதி கூறிய கருத்துக்கு பதிலளிப்பதாக அவரது அறிக்கை அமைந்திருந்தது. சுயநிர்ணய உரிமை என்பது பிரிவினை அல்ல என்பதோடு, தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை தனி இனவாதமாகவும் ஸ்ரீலங்கா அரச அறிக்கை சித்தரித்திருந்தது. இனவாத அரசாங்கங்களுக்கு எதிராக ஒரு மக்கள் ஆயுதப் போராட்டத்தை நடத்துவதும், சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதும் சர்வதேசச் சட்டவரையறையினுள் அடங்கும் என வாதாடிய அன்ரன் பொன்ராஜாவின் அறிக்கை சுயநிர்ணய உரிமைக்காக போராடும் ''மக்கள்!'' என்பதற்காக வரைவிலக்கணம் சர்வதேசச் சட்டத்தினுள், தனி இனமென வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தது.

உலக சமாதான அமைப்பு என்ற சர்வதேசமனித உரிமை அமைப்பு ஒழுங்கு செய்த அறிக்கை 120 மனித உரிமை அமைப்புக்களினால் கூட்டாகக் கைச்சாத்திடப்பட்டு உலக மனித உரிமைகள் மாநாட்டுத் தலைவரிடம் கையளிக்கப்பட்டது இவ்வறிக்கையானது சிறிலங்கா அரசாங்கம் வடக்கு கிழக்கில் இடம்பெறும் ஆயுத முரண்பாட்டிற்கு, இராணுவ ரீதியாகவே தீர்வு காண முயல்வதாக கண்டித்ததோடு, இலங்கைத் தீவானது, இரண்டு நாடுகளாக பிரிவதற்கு நெருக்கமாக வந்துள்ளதாகவும் எடுத்துக் காட்டியது தமிழ் மக்கள் மீது தரையாலும் கடலாலும் ஆகாயத்தாலும் தொடுக்கப்பட்டுள்ள தாக்குதல்களை கண்டித்ததோடு, மின்சாரத் தடை, மருந்து, உணவு எரிபொருள் ஆகிய 42 க்கு மேற்பட்ட பொருள்கள்மீதான அரசாங்கத்தின் தடையையும் அவ்வறிக்கை கண்டித்துள்ளது. இவ்வறிக்கைய னது, சிறிலங்கா அரசாங்கம் உடனடியாக பொருளாதாரத் தடையையும் நீக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தது. மேலும், யுத்த நிறுத்தம் கொண்டுவரப்பட்டு பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும் எனவும் தமிழ் மக்களின் பிரச்சினை மனித உரிமைகளின் அடிப்படையிலும், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும், தீர்க்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தது. உலக சமாதான அமைப்பின் பிரதிநிதிகளில் ஒருவராக வந்த செல்வி மான் என்பவர் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் கூறுகையில் "உலகில் தேசிய இனங்களின் விடுதலை சம்மந்தப்பட்டதும், சுயநிர்ணய உரிமை குறித்ததுமான பிரச்சினையே முதன்மை வகிக்கிறது ஆயினும், மாநாட்டிலோ, மாநாட்டுத் தீர்மானத்திலோ அதற்குரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றே கருதுகிறேன் இது, ஏமாற்றத்தை அளிக்கிறது. ஏராளமான மனித உரிமை அமைப்புக்களை சந்திக்க வைக்க இம் மாநாடு உதவியுள்ளது" என்று தெரிவித்தார்

தேசிய, உள்நாட்டு உத்தியோகஸ்தரின் அமைப்பு என்ற மனித உரிமைகள் அமைப்பு, தமிழ் மக்களின் போராட்டத்தை ஆதரித்து பத்திரிகை அறிக்கையொன்றை வெளியிட்டது. இவ்வறிக்கை சிங்கள குடியேற்றங்களையும், ஆயுதபடைகளினால் மக்கள் கொல்லப்படுவதையும், காணாமல் போவதையும் கடுமையாக கண்டித்ததோடு, இவ் அடக்குமுறை ஒரு இனப்படுகொலை எனவும் வர்ணித்தது: தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளோடு சிறிலங்கா அரசாங்கம் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவ்வறிக்கை கேட்டுள்ளது.

# துட்டகைமுனுக்கள் எமக்கு வேண்டாம்

சிங்கள இராணுவத்தினரை துட்டகைமுனுக்கள் என்றும், தேசியவீரர்கள் என்றும் பௌத்த பேரினவாதமும். சிங்கள அரசாங்கமும் போற்றித் துதி பாடுவதுண்டு. இந்த வரிசையில், லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ துட்டகைமுனுவின் மறு அவதாரமாகவே போற்றப்பட்டவர்.

ஆனால், அவரின் ஓராண்டு நினைவு நாளை ஒட்டி பத்திரிகை ஒன்றிற்குப் பேட்டியளித்த அவரின் மனைவியான லலி கொப்பேகடுவ, தனது இரு மகள்மாரையும் எதுவித காரணம் கொண்டும் இராணுவத்தில் உள்ள எவருக்கும் தான் திருமணம் செய்து வைக்க மாட்டேன் எனத் தெரிவித்துள்ளார்.

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ இராணுவத்தைச் சேர்ந்தவர் என்றும் மிக உயர்வாக மதித்தவர். அவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர். தான் ஓர் இராணுவ அதிகாரி என பதினால் பெருமைப்பட்டுக் கொண்டவர். நீண்ட நேரம் கடமையாற்ற வேண்டும் என்பதற்காக அனுராதபுரத்திற்கே தனது வாசஸ்தலத்தை மாற்றியவர். இதேவேளை, அவருக்குக் கீழ் இருந்த இராணுவத்தினரும் அவரைப் பெரிதும் விரும்பினர். தமது நம்பிக்கை நட்சத்திரமாகக் கருதினர். இதுவே அவரை துட்டகைமுனுவாகவும், தேசிய வீரராகவும் உயர்த்தியது.

இந்நிலையில், எனது குடும்பத்தில் இனித் துட்டகைமுனுக்களும், வீரபுரன் அப்புக்களும் வேண்டாம் என்ற ரீதியிலான லலி கொப்பேகடுவவின் அறிவிப்பானது பெரும் ஆச்சரியம் அளிக்கும் ஒன்று என்பதில் சந்தேகமில்லை. தமிழரின் தேசிய இனப்போராட்டத்தை அழித்து சிங்களப் பேரினவாதத்தை நிலைநாட்ட இரவு பகலாக உழைத்த ஒருவரின் மனைவியின் இவ் அறிவிப்பானது அவர் எந்தளவிற்குப் வெறுப்படைந்துள்ளார் என்பதைக் காட்டுவதாகவே உள்ளது.

லலி கொப்பேகடுவ இவ்வளவிற்கு வெறுப்படைந்தமைக்குப் பல காரணிகள் இருக்கலாம். எனினும், தனது அறிவிப்பின் மூலம் பௌத்த

# புதிய வீராணம் திட்டத்திற்கு உலகவங்கி நிதி வழங்கும்

ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் புதிய வீராணம் ... ள் பொதுக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், 464 கோடிரூபா

# இந்திய - இலங்கை ஒப்பந்தமே ராஜீவ் கொலைக்கு மூலகாரணி

## வழக்கறிஞர் இராஜமாணிக்கம் விபரிப்பு

நேரம் கடமையாற்ற வேண்டும் என்பதற்காக அனுராதபுரத்திற்கே தனது வாசஸ்தலத்தை மாற்றியவர். இதேவேளை, அவருக்குக் கீழ் இருந்த இராணுவத்தினரும் அவரைப் பெரிதும் விரும்பினர். தமது நம்பிக்கை நட்சத்திரமாகக் கருதினர். இதுவே அவரை துட்டகைமுனுவாகவும், தேசிய வீரராகவும் உயர்த்தியது.

இந்நிலையில், எனது குடும்பத்தில் இனித் துட்டகைமுனுக்களும், வீரபுரன் அப்புக்களும் வேண்டாம் என்ற ரீதியிலான லலி கொப்பேகடுவவின் அறிவிப்பானது பெரும் ஆச்சரியம் அளிக்கும் ஒன்று என்பதில் சந்தேகமில்லை. தமிழரின் தேசிய இனப்போராட்டத்தை அழித்து சிங்களப் பேரினவாதத்தை நிலைநாட்ட இரவு பகலாக உழைத்த ஒருவரின் மனைவியின் இவ் அறிவிப்பானது அவர் எந்தளவிற்குப் வெறுப்படைந்துள்ளார் என்பதைக் காட்டுவதாகவே உள்ளது.

லலி கொப்பேகடுவ இவ்வளவிற்கு வெறுப்படைந்தமைக்குப் பல காரணிகள் இருக்கலாம். எனினும், தனது அறிவிப்பின் மூலம் பௌத்த பேரினவாதம் தனது கணவரைப் பலியிட்டு விட்டது என்றும், துட்டகைமுனுக்கள் இனிமேல் வெல்லப் போவதில்லை என்பதையுமே இது காட்டுவதாகவுள்ளது. அதாவது, பௌத்த பேரினவாதம் இனி வெல்லப் போவதில்லை என்பதும், போருக்குச் செல்லும் துட்டகைமுனுக்கள் இனித் திரும்பி வரப்போவதில்லை என்பதும் அவரது அனுமானமாகவுள்ளது.

லலி கொப்பேகடுவ அவர்களின் இக்கணிப்பீடானது பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதே. ஏனெனில், விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் தாக்குதல் முறைகள் உலக இராணுவ ஆய்வாளர்களையே அதிர்ச்சிக்கு உள்ளாக்குபவையாகவுள்ளன. அராலித் துறையில் டென்சில் கொப்பேகடுவ கொல்லப்பட்ட தாக்குதலில் இருந்து பல்வேறு அதிர்ச்சியூட்டும் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ளனர்.

இவை தவிர, ஒரு தேசிய வீரனாகத் தனது கணவனுக்கு தேசிய அளவில் கௌரவம் வழங்கப்படவில்லை என்பதும் லலி கொப்பேகடுவவைப் பொறுத்து மனத்தாங்கலான விடயமாகும். தனது கணவன் உயிருடன் இருக்கும்போது அரசியல்ரீதியான பழிவாங்கலுக்கு உள்ளானதாகவும், இறந்த பின்னரும் அது தொடர்ந்ததாகவும் அவர் கருதுகின்றார். அவரின் இக்கருத்திலும் நியாயங்கள் இல்லாமல் இல்லை.

இந்நிலையில், லலி கொப்பேகடுவவின் முடிவானது அவரைப் பொறுத்துமட்டுமல்ல சிங்கள பெற்றோர்களைப் பொறுத்து ஒரு நல்ல முன்உதாரணமாகும். அதாவது, உயர்நிலையில், சகல வசதிகளுடனும், பாதுகாப்புடனும் இருந்த டென்சில் கொப்பேகடுவ போன்றோரே கொல்லப்படும் நிலையில், சாதாரண சிப்பாய்களின் பாதுகாப்பு எந்தளவு இருக்கும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளுதல் நன்மை பயக்கக் கூடியதாகும்.

இவை யாவற்றிற்கும் மேலாக, பௌத்த பேரினவாதத்திற்கே இது பலத்த அடியாகும். துட்டகைமுனுவின் மனைவி தனது புதல்வர்களையே உதாசீனம் செய்வது போன்றதான இந்நிலையானது பௌத்த பேரினவாதம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடியின் முன்னறிவிப்பு ஒன்றே ஆகும். அதாவது துட்டகைமுனுக்களுக்கு 'ஹீரோக்கள்' ஸ்தானத்தை வழங்க சிலர் மறுப்பதென்பது பௌத்த பேரினவாதம் தனது ஹீரோக்கள் கவர்ச்சித் தன்மையை இழந்து வருகின்றார்கள் என்பதை விளங்கிக் கொள்ள உதவக் கூடும்.

---

வகிக்க ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார, சமூக அமைப்பில் அங்கம் வகிக்கும் சர்வதேச அரச சார்பற்ற மனித உரிமை நிறுவனங்கள் மாத்திரமல்லாமல், பிராந்திய அடிப்படையிலான மனித உரிமை நிறுவனங்களும் நூற்றுக்கணக்கில் பங்குகொண்டன.

அம் மாநாட்டில் கலந்து கொண்ட விடுதலைப்புலி

'தமிழர் மையம்' என்ற அமைப்பு பெரிய அளவிலானதும், நிலைமையை விஸ்தாரமாக சித்திரிக்கக் கூடியதும், உணர்வைத் தூண்டக் கூடியதுமான கண்காட்சி ஒன்றையும் நடத்தியது. தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினை குறித்து விபரிக்கின்ற ஏராளமான நூல்களும், பிரசுரங்களும், படுகொலைப் படங்களும் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்

தாகவும், அவ் உரிமையை சர்வதேசச்சட்ட வரையறையினுள் நெறிப்படுத்த, அரசாங்கங்கள் மத்தியில் விருப்பமின்மை காணப்படுவதாகவும் கூறினார் ஸ்ரீலங்கா அரச பிரதிநிதி கூறிய கருத்துக்கு பதிலளிப்பதாக அவரது அறிக்கை அமைந்திருந்தது. சுயநிர்ணய உரிமை என்பது பிரிவினை அல்ல என்பதோடு, தேசிய சுயநிர்ணய உரிமைப்

கண்டித்திருப்பதோடு, மின்சாரத் தடை, மருந்து, உணவு எரிபொருள் ஆகிய 42க்கு மேற்பட்ட பொருள்கள்மீதான அரசாங்கத்தின் தடையையும் அவ்வறிக்கை கண்டித்துள்ளது. இவ்வறிக்கையானது, சிறிலங்கா அரசாங்கம் உடனடியாக பொருளாதாரத் தடையையும் நீக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தது. மேலும், யுத்த நிறுத்தம் கொண்டுவரப்

தோடு, இவ் அடக்கு முறைகள் ஒரு இனப்படுகொலை எனவும் வர்ணித்தது: தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளோடு சிறிலங்கா அரசாங்கம் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவ்வறிக்கை கேட்டுள்ளது.

---

# புதிய வீராணம் திட்டத்திற்கு உலகவங்கி நிதி வழங்கும்

### ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் புதிய வீராணம் திட்டத்திற்கு உலகவங்கி நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தபின்னர் பொதுக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், 464 கோடிரூபா செலவில் இத்திட்டம் அடுத்த ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டு 1995ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் முடிவுறும் என்றும், இத்திட்டத்தின் மூலம் சென்னை நகருக்கு தினமும் 40 மில்லியன் கலன் தண்ணீர் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

# விமானக் கடத்தல் முயற்சி ஜெர்மனியில் முறியடிப்பு

(பேர்லின்)

கே. எல். எம். விமானமொன்றை ஜெர்மனியின் டுசில்டோவ் விமான நிலையத்திற்கு கடத்திச் செல்ல முற்பட்ட எகிப்தியர் ஒருவர் ஜெர்மன் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கே எல். எம் விமானத்தில் இருந்த 131 விமானப் பயணிகளையும், ஏழு சிப்பந்திகளையும் பொலிசார் விடுவித்துள்ளனர்.

தம்மிடம் வெடிகுண்டு இருப்பதாகவும். அதனால் விமானத்தை நியூயோர்க் நகருக்கு செலுத்துமபடியும் அரபு மொழியில் பேசிய அவர் தெரிவித்தார். ஆனால் நியூயோர்க் செல்ல போதுமான எரிபொருள் அந்த விமானத்தில் இல்லை என்று விமானச் சிப்பந்திகள் விளக்கிச் சொன்னதையடுத்து டுசில்டோவ்விற்கு எடுத்துச் செல்ல அக்கடத்தல்காரர் ஒப்புக் கொண்டார்.

ஜெர்மனியின் டுசில்டோவ் விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கிய பின்னர் கடத்தல்காரருடன் ஜெர்மன் பொலிசார் நடத்திய பேச்சுவார்த்தைகளையடுத்து 55வயதுடைய எகிப்தியரான அக்கடத்தல்காரர் கைதுசெய்யப்பட்டார்'

நியூயோர்க்கில் இருக்கும் உலக வணிக மையக் கட்டடத்தைக் குண்டு வைத்துத் தகர்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஷேய்க்கின் ஆதரவாளர்கள் விடுவிக்கப்பட வேண்டுமென்பதே கடத்தல்காரரின் கோரிக்கையாக இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

# பொஸ்னியாவிலிருந்து 39 பேர் விமான மூலம் வெளியேறினர்

(சரஜேவோ)

முற்றுகைக்கு உட்பட்டுள்ள சரஜேவோவிலிருந்து கடுமையாகக் காயமடைந்த முப்பதுக்கும் மேற்பட்ட பொஸ்னியர்கள் விமானம் மூலமாக நாட்டிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டனர். பதினொரு குழந்தைகள் உட்பட முப்பத்தொன்பதுக்கும் மேற்பட்ட அந் நோயாளர்களுக்கு பிரிட்டன் மற்றும் சுவீடன் மருத்துவ மனைகளில் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இதேவேளை முற்றுகைக்கு உட்பட்டிருக்கும் சுமார் நான்கு லட்சம் பேர்களையும் உயிர் பிழைக்க வைத்திடுவதற்கு அவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் நல கமிஷனர் சரஜேவோ விலிருந்து தெரிவித்துள்ளார்.

# இந்திய - இலங்கை ஒப்பந்தமே ராஜிவ் கொலைக்கு மூலகாரணி

### வழக்கறிஞர் இராஜமாணிக்கம் விபரிப்பு

(சென்னை)

இந்திய இலங்கை உடன்படிக்கையே ராஜிவ் கொலைக்கான மூலகாரணமாகும் என்று சென்னை பூந்தமல்லி விசேட நீதிமன்றத்தில் விசேட நீதிபதி எஸ். எம். சித்திக் முன்னிலையில் இடம்பெறும் ராஜிவ்காந்தி கொலை வழக்கு விசாரணையில் அரசதரப்பு வழக்கறிஞர் எம். இராஜமாணிக்கம் தெரிவித்தார். ராஜிவ் காந்தியை புலிகள் இயக்கம் கொலை செய்ய வழிவகுத்த நோக்கங்கள்பற்றி எடுத்துரைத்த அவர் மேலும் குறிப்பிடுகையில்

1987 ஜூலை 27 இல் முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவுடன் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி கொழும்பில் கையெழுத்திட்ட உடன்படிக்கை தமிழ் ஈழம் அமைக்கும் யோசனையை நிராகரித்து இருந்ததால் பிரபாகரன் ஆத்திரம் அடைந்திருந்தார்.

இலங்கையின் ஐக்கியம், பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் சுயதிபத்தியம் ஆகியவற்றின் மீதான இந்தியாவின் பற்றுறுதியையும் உடன்படிக்கையில் வலியுறுத்தி தெரிவித்திருந்தது புலிகளால் நிராகரிக்கப்பட்ட இச் சமாதான உடன்படிக்கையே ராஜிவ் காந்தி கொலைச் சதிக்கான மூலகாரணி என்றும் தெரிவித்தார். அத்துடன் இலங்கையில் தனிநாடு ஒன்று அமைக்கப்படுவதை நிராகரித்ததன் மூலம் ராஜிவ் காந்தி துரோகம் செய்து விட்டார். என பிரபாகரன் கூறியிருந்தார் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் நாம் இந்தியாவுக்கோ, இந்திய மக்களுக்கோ எதிரானவர்கள் அல்ல. எமது இலட்சியப் போராட்டத்திற்கு எதிராக செயற்பட்ட இந்தியாவின் முன்னாள் தலைமைத்துவத்திற்கே எதிரானவர்கள் என்றும் இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறிய பின்னர் தலைவர் பிரபாகரன் கூறியிருந்தார் என்பதையும் நினைவுபடுத்தினார்.

இந்தியா இடைத்தேர்தல் ஒன்றை நோக்கி சென்று கொண்டிருந்த 1990ஆம் ஆண்டின்பிற்பகுதியில் ராஜிவ் காந்தியின் செல்வாக்கு அதிகரித்துக் காணப்பட்ட வேளையில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள பற்றுறுதியை காங்கிரஸ் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் குறிப்பிட்டிருந்ததால் புலிகள் இயக்கத்தினர் ராஜிவ் காந்தியை கொலை செய்ய திட்டமிட்டனர் என்றும் தெரிவித்தார்.

# சென்னையில் பிரான்ஸ் கடற்படைக்கப்பல்

பிரான்ஸ் நாட்டின் கடற்படைக் கப்பலான வி. ஏ.ஆர். நேற்றுக் காலை சென்னை துறைமுகத்திற்கு வந்துள்ளது வைஸ் அட்மிரல் ஹபர்ட் பெலர்ட் தலைமையில் வந்துள்ள இக்கப்பல் சென்னையில் ஆறு தினங்கள் தங்கிநிற்கும் என்றும், அதன் பின்னர் 21ஆம் திகதியன்று புதுச்சேரிக்குப் புறப்பட்டுச் செல்லும் என்றும் சென்னையிலுள்ள பிரான்ஸ் நாட்டின் கௌரவ கவுன்சிலர் தீபக் பங்கர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் சட்ட ஒழுங்கு சீராக பேணப்பட வில்லை

### காங்கிரஸ் எம். பி குற்றச்சாட்டு

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சரிவரப் பராமரிக்கப்படவில்லை என்றும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மீது பொலிசார் பொய்வழக்குகள் தாக்கல் செய்கின்றனர் என்றும். மக்களவையின் காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ்கோடி ஆதித்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் சாத்தான் குளத்தில் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் குமரி அனந்தன் அ. இ. அ. தி. மு. க சட்டமன்ற உறுப்பினர் உட்பட மூவர் கொண்ட குழுவினரால் தாக்கப்பட்டனர் என்றும், தாமிரபரணி மேம்பாட்டுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# என்னை எதிர்த்தோர் இணைய வருகின்றனர்

எனக்கெதிராகப் புகார்கள் சுமத்தினர் எனது உறுப்புரிமையை இல்லாமலாக்க முயற்சித்தனர். என்னவெல்லாமோ செய்து என்னை அரசியலிலிருந்து வெளியேற்ற முயற்சித்துத் தோல்வி கண்ட இந்திரா காங்கிரஸ்காரர் இன்று அ. தி. மு. கவுடன் கூட்டுச் சேரப் பார்க்கின்றனர்

இவ்வாறு தமிழ்நாடு முதல்வர் செல்வி ஜெயலலிதா விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழக குண்டு வெடிப்புப் பற்றி என்னுடன் பேச வந்த மத்திய உள்துறை அமைச்சர் ராஜேஸ் பைலட்டும் கூட அந்த முயற்சியில் ஈடுபட்டார். குண்டு வெடிப்புப் பற்றி ஆராய சி.பி.ஐ.யைத் தாருங்கள் என்று கேட்டேன் அவர் மறுத்தார். புதுடில்லி வந்து பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று என்னிடம் தெரிவித்தார்.

ஈழநாதம்

# கிளாலி-பூநகரி படகு சேவை மறு சீரமைக்க நடவடிக்கை

## கடற்புலிகள் விசேட தளபதி சூசை தெரிவிப்பு

"அடுத்து நடைபெறவுள்ள கிளாலி-பூநகரி படகுச்சேவை மறுசீரமைக்கப்பட்ட புதிய ஒரு சேவையாக அமையும் இதற்கென புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன" என கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசை தெரிவித்துள்ளார்.

இன்பருட்டி காண்டீபன் விளையாட்டு அரங்கில் திரு. க. சிவராசா தலைமையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தின் போது உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "எமது மக்கள் ஏதோ ஒரு காரணத்திற்காககிளாலிக் கடல் மரணவாயிலைத் தாண்டவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களைப் பாதுகாப்பாக கொண்டு செல்லவேண்டியது படகோட்டிகளின் பொறுப்பு.

"சில படகோட்டிகள் மது போதையில் செயல்படுகிறார்கள். இதனை நான் நேரிலே அவதானித்தேன். இவ்வாறானவர்களைக் களைந்தெடுத்து அனுபவம் மிக்கவர்களைச் சங்கங்களூடாக தெரிவு செய்து படகுச் சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சங்கங்கள் மூலம் சிபார்சு செய்யப்படுபவர்களே இனிமேல் படகோட்டிகளாக இருக்க முடியும்.

"அத்தோடு நல்ல நிலையிலுள்ள பெரியபடகுகளே இனிமேல் படகுச் சேவையில் ஈடுபடும். கடல் குறித்து நன்கு தெரிந்தவர்களும் ஓட்டும் திறமை உள்ளவர்களுமே இனிமேல் ஓட்டிகளாக இருக்க முடியும்.

"கிளாலியில் ஓடுவது சாதாரண உப்புத் தண்ணீர் அல்ல. அது தமிழினத்தின் குருதி. அங்கே இறப்பவர்களும் எமது உறவுகள் தான்" என்றார்.

மற்றும் விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு.மு.வே யோ. வாஞ்சிநாதன் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு சி. முருகேசம்பிள்ளை ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

முதல் நாள் நிகழ்வின் போது பிரதேச செயலர் பரிசில்களை வழங்கினார். இரண்டாவது நாள் நிகழ்வின் போது திரு. சூசை பரிசில்களை வழங்கினார். (யோ)

நல்லூர்த் தேர்த் திருவிழாவில்

## திருட்டில் ஈடுபட்டவர் காவல்துறையால் கைது

(கொழும்புத்துறை)

நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழாவின் போது திருட்டில் ஈடுபட்ட பெண்மணி ஒருவர் தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

நேற்றைய தினம் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்ட தேர்த்திருவிழாவின் போது பெண் பக்தர் ஒருவரின் தாலிக் கொடியை அறுத்துக் கொண்டு தப்பமுயன்றபோதே காவல்துறையினரிடம் பிடிபட்டார்.

இதேவேளை மூதாட்டி ஒருவரின் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பதக்கச் சங்கிலியும் ஆலய உள் வீதியில் திருடப்பட்டுள்ளது.


## தமிழ்த்தாய் புத்தகசாலை!

தமிழ்த் தாய் புத்தகசாலையினர்
தமது ஓராண்டு நிறைவை
உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்கள்.

ஆம்!

பாலர் முதல் பட்டதாரி மாணவர் வரை
ஆசிரியர் முதல் ஆய்வாளர் வரை

அரசியல் - சமூக - விஞ்ஞான - வரலாற்று - புது நூல்கள்


## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

(யாழ்ப்பாணம்)

லயன்ஸ் கழக ஆதரவில் ஊனமுற்ற சகோதரர்களுக்கு உதவும் வகையில் நிதிதிரட்டுவதற்காக அதிர்ஷ்ட லாபச் சீட்டு விற்கப்படுகிறது. சீட்டு விற்பனைமுடிவுத்திகதி 5.9.93 ஆகும். பொதுமக்கள் ஊனமுற்ற சகோதரர்களுக்கு உதவுமாறு கேட்கப்படுகிறார்கள்.

## தமிழரின் கால்நடைகள் ராணுவத்தால் அபகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சில மேய்ச்சற்தரைக் கிராமங்களைகத்தி, வாள், கைத்துப்பாக்கி மற்றும் கைக் குண்டுகள் சகிதம் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் பொது மக்களின் பசுமாடுகளையும் கன்றுகளையும் பிடித்துச்சென்றுள்ளனர்.

கடந்த 11-ம், 12-ம் திகதிகளில் காலை வேளையில் கரவெட்டியாறு, பாவற்கொடிச் சேனைபோன்ற மேய்ச்சற்தரைகளைச் சுற்றிவளைத்த உன்னிச்சை இராணுவத்தினரும், முஸ்லிம் காடையர்களுமே அவ்விடங்களில் மேய்ந்து கொண்டிருந்த 12 ற்கு மேற்பட்ட பசுமாடுகளையும் அதன் கன்றுகளையும் பிடித்துச் சென்றுள்ளனர்.

## பதுங்கியிருந்து தாக்கியதில் ஒரு பொதுமகன் பலி

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ தேசத்துரோகிகளும் அம்பிலாந்துறையில் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் பொதுமகன் ஒருவர் பலியானார்.

கடந்த 14 ஆம் திகதி காலை 7 மணியளவில் கொக்கட்டிச் சோலை இராணுவத்தினரும் ரெலோ துரோகிகளும் நடத்திய இத் தாக்குதலில் நாசமுனை அம்பிலாந்துறையைச் சேர்ந்த கந்தப்பொடி நித்தியானந்தம் (வயது 32) என்பவரேபலியானவராவார்.

பிரபாவின்

காத்ததை எனது உயிருள்ள வரை நானும் எனது குடும்பத்தவரும் மறக்க மாட்டோம்" என்று கெரிவித்தார்.

கடற்படை

கப்பட்டுள்ளார். திருக்கோணமலை கடற்படை பிரிவைச் சேர்ந்த கப்டன் வசந்தகரனாகொட கிழக்குப் பிராந்திய கடற்படை உதவித் தளபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காவல்

ளத் திட்டமிட்டிருப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து காவல் பலப்படுத்தப்பட்டுள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

மாநகர

கட்டடம், வாடிவீடு போன்ற பல இடங்களை இராணுவத்தினர் எடுத்துள்ளனர்.

இதனிடையே மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தையும் மட்டக்களப்பு கச்சேரியில் உள்ள டச்சுக் கோட்டைக்கு மாற்ற முயற்சிகள் நடைபெறுகின்றன.

மோட்டார்

வார நாட்களில் காலை 8 30 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரையிலும் சனிக்கிழமை

யாழ் குடாநாட்டில்

இராணுவத்தை மீளப்பெற்று வடக்கே அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறியவருகின்றது.

இதேவேளை பாரிய போர்க்கப்பல்கள் ஆயுத தளபாடங்களுடன் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும தெரியவருகிறது. இதில் ஒரு கப்பல் காங்கேசன்துறையில் தளபாடங்களை இறக்கியுள்ளது. இதேவேளை வெற்றிலைக்கேணிப் பகுதியில் பாரிய போர்க்கப்பல் ஒன்று தரித்து நிற்பதாகவும் அறியமுடிகின்றது

இந் நிலையில் யாழ். குடாநாட்டில் இராணுவம் விரைவில் தாக்குதல் ஒன்றை நடத்தலாம் என அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

எறிகணை

கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களால் இரு வீடுகள் சேதமடைந்தன.

# வடக்கு - கிழக்கு பிரச்சினையில் ஐ. நா. தலையிட காரணமில்லை!

## சமரச திட்டம்குறித்து அரசு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினை. அது ஒரு இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதப் பிரச்சினையே எனவே இதை தீர்க்க ஐ. நா. தலையிடுவதற்கு காரணம் எதுவும் கிடையாது என்று தெரிவிக்கும் கடிதமொன்றை ஜனாதிபதியின் செயலாளரான கே. எச். ஜே. விஜேதாஸ உலகளாவிய ஒத்துழைப்புக்கான உலக கவுன்சிலின் சர்வதேச செயலாளரான ஜேம்ஸ் நிக்கலசிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை தீர்வு குறித்து திட்டம் ஒன்றை நோபல் பரிசு பெற்ற நான்கு அறிஞர்களும் உலகளாவிய ஒத்துழைப்பிற்கான உலக கவுன்சிலும் இணைந்து வெளியிட்டிருந்தன. இதில் ஐ. நா. மத்தியஸ்தம் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இத் திட்டத்தை நிராகரித்து ஜனாதிபதியின் சார்பில் அவரின் செயலர் அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தாங்கள் அறிந்திருப்பதைப் போன்று இலங்கையின் வடக்கு கிழக்கில் நிலவும் வன்செயல் பிரச்சினை முற்றுமுழுதாக ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாகும். அதுவொரு இனப்பிரச்சினை அல்ல. அதுவோர் பயங்கரவாதப் பிரச்சினையாகும். அது துப்பாக்கிக் கலாசாரத்தை மையமாகக் கொண்டது. ஒவ்வொரு இனக் குழுவும் ஒவ்வொரு மதப்பிரிவும ஒன்றுகொன்று சமமான பங்காளர்கள் என இருக்கக் கூடிய ஓர் இலங்கையை அது கோருகிறது.

தற்போதைய பிரச்சினைக்கு சாத்தியமானதொரு வெற்றிவாய்ப்பு மக்களின் பொதுத் தன்மையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டாலே இயலும் அத்தகைய தீர்வு உள்நாட்டு அரசியல் நடவடிக்கை ஒன்றினால் மட்டுமே ஏற்கப்படக் கூடியதாக இருக்கும். எனவே பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றின் மூலம் அரசியல்தீர்வு சம்பந்தமாக இணக்கப்பாட்டினைப்பெற அனைத்து முயற்சிகளும் தொடரும். தற்போதைய சூழ்நிலையில் ஐ. நா. தலையிடக்காரணம் இருப்பதாக இலங்கை அரசு கருதவில்லை.

ஏற்கனவே மாகாணசபை அமைப்புமூலம் முன்னெடுக்கப்பட்டுள்ளதைப்போன்று அதிகாரப்பகிர்வு மக்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடியதாக இருக்கும் என்பதுடன் நாட்டை கட்டியெழுப்பும் இலக்கில் மக்கள் பங்குபற்றுதலை முன்னெடுக்கவும் உதவும் என்பதில் எமது அரசியல் கட்சிகளிடையே கிட்டத்தட்ட முழுமையான உடன்பாடு உள்ளது என அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அச்சுறுத்தும் வகையில் ஜெயலலிதா பேசினாரா?

முதலமைச்சர் ஜெயலலிதா சுதந்திரதின உரையின்போது காவிரிநீர் பிரச்சினை குறித்து அச்சுறுத்தும் வகையில் பேசினாரா என்பது பற்றி மத்திய அரசு ஆராய்ந்து வருவதாகவும் அவ்வாறு அவர் பேசியிருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியுள்ளார்.

ஜெயலலிதா தனது உரையில் காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை மத்திய அரசு நடைமுறைப்படுத்தாவிட்டால் தேச ஒற்றுமைக்கு அபாயம் ஏற்படும எனக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது எனினும் ஜெயலலிதாவின் உரையை பத்திரிகைகள் திரித்து வெளியிட்டு விட்டதாக அ. தி. மு. க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



சங்கங்களூடாக தெரிவு செய்து படகுச் சேவையில் ஈடுபடுத்து

கொண்ட தேர்த்திருவிழாவின் போது பெண் பக்தர் ஒருவரின்

ஆலய உள் வீதியில் திருடப் பட்டுள்ளது.


# தமிழ்த்தாய் புத்தகசாலை!

தமிழ்த் தாய் புத்தகசாலையினர்
தமது ஓராண்டு நிறைவை
உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்கள்.

**ஆம்!**

பாலர் முதல் பட்டதாரி மாணவர் வரை
ஆசிரியர் முதல் ஆய்வாளர் வரை

அரசியல் - சமூக - விஞ்ஞான - வரலாற்று - பாட நூல்கள்,
சித்திரத் தொடர்கதைகள், சிறு கதைகள், நாவல்கள்
கவிதைகள், சஞ்சிகைகள், பாடசாலை உபகரணங்கள் என

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

★ **நாடவேண்டிய ஒரே இடம்!** ★

## தமிழ்த்தாய் புத்தகசாலை

191, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலைய அருகாமை)
யாழ்ப்பாணம். (சி/7207)



வண்ணமயிலேறி தீர்த்தமாடிட நல்லைக் கந்தன் திருவுலா வரும்
தீர்த்தத் திருநாளிலே அனைவருக்கும் அவனருள் கிடைக்கட்டும்.

**மென்பானப் பிரியர்களே!**

உங்கள் அனைவரதும் அபிமானம் பெற்ற மென்பானங்கள்

**புத்தூக்கி - REFRESHER**

மென்பானங்கள்

தரம், சுத்தம், சுவை நிறைந்தவை

அத்துடன்

குழந்தைகள் விரும்பிடும் இன்சுவை

**சொக்கா - CHOCA சொக்லட்**

மற்றும் ★ ஜாம் வகைகள்

புத்தூக்கியின்

★ **நெல்லிக்கிறஸ் NELLI CRUSH** REFRESHER

★ **கூல்மன்ஸ் - COOLMANS**

தரமான ★ **ஒட்டும்பிசின் - JAF-FIX GUM**

தயாரித்து வழங்குபவர்கள்:-

பனை, தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களின்

யாழ் - கொத்தணி - யாழ்ப்பாணம். (சி-7208)


காவல்

ளத் திட்டமிட்டிருப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து காவல் பலப்படுத்தப் பட்டுள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

மா நகர

சட்டடம், வாடிவீடு போன்ற பல இடங்களை இராணுவத்தினர் எடுத்துள்ளனர்.

இதனிடையே மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தையும் மட்டக்களப்பு கச்சேரியில் உள்ள டச்சுக் கோட்டைக்கு மாற்ற முயற்சிகள் நடைபெறுகின்றன.

மோட்டார்

வார நாட்களில் காலை 8 30 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரையிலும் சனிக்கிழமைகளில் காலை 8. 30 மணி தொடக்கம் மாலை 1. 00 மணிவரையிலும் பரிசோதனைக்குட்படுத்துமாறு மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் பொது மக்களை கேட்டுக் கொள்கின்றனர். சிறிலங்காவினால் வழங்கப்பட்ட மூல ஆவணங்கள் உள்ளோரும் மூல ஆவணங்கள் இல்லாதோரும் பதிவுகளைமேற்கொள்ளலாம். பதிவுகளை மேற்கொள்ள வருபவர்கள் தத்தமது குடும்ப அட்டைகளையும் தவறாது தம்முடன் எடுத்து வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விமானப்படை

திரையாகியுள்ளனர். வள்ளம் மெதுமெதுவாக நீரில் அடித்துச் செல்லப்பட்டு விமானப் படை முகாமை நோக்கி கரை ஒதுங்கியது. இதனை அடுத்து அப் படகு மீது சந்தேகம் கொண்டபடையினர் அதனை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார். மற்றவர் கைதுசெய்யப்பட்டு விமானப்படைமுகாமில் வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றார் என தெரியவருகின்றது.

இதேவேளை பாரிய போர்க் கப்பல்கள் ஆயுத தளபாடங்களுடன் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும தெரியவருகிறது. இதில் ஒரு கப்பல் காங்கேசன்துறையில் தளபாடங்களை இறக்கியுள்ளது. இதேவேளை வெற்றிலைக்கேணிப் பகுதியில் பாரிய போர்க்கப்பல் ஒன்று தரித்து நிற்பதாகவும் அறியமுடிகின்றது

இந் நிலையில் யாழ். குடாநாட்டில் இராணுவம் விரைவில் தாக்குதல் ஒன்றை நடத்தலாம் என அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

எறிகணை

கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களால் இரு வீடுகள் சேதமடைந்தன.

இதேவேளை மாதகல் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் சில்லாலைப் பகுதி மக்கள் வாழ்விடங்கள் மீது எறிகணைத் தாக்குதல்களை நடாத்தினர்.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் அச்சமடைந்த மக்கள் அங்கிருந்து ஏற்கனவே வெளியேறியிருந்தமையால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

ஒருவருடம்

இவ் ஆண்டில் நியமனம் பெற்ற பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்காக அவர்களது சேவை மதிப்பீடு செய்யப்படுகிறது பட்டம் பெற்றிருப்பினும் நிரந்தர நியமனம் பெறாத சுமார் 2000 ஆசிரியர்களுக்கு இவ் ஆண்டிற்குள் நிரந்தர நியமனம் வழங்கி புதிய சம்பளம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில மாதங்களில் மேலும் 500 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கல்விச் சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 16-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10612

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9327, 42-2312, 40-9188, 28-9649, 28-6623, 26-3528, 26-0502, 26-0407, 24-9676, 24-9856, 27-4630, 27-0493, 26-0675, 27-8999, 28-3528, 24-6431, 26-1939, 28-4354.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-2862, 24-6293, 24-0336, 26-5281, 41-5605, 42-1059, 27-9771, 42-3815, 26-4436, 27-5863.

அரசு ஆராய்ந்து வருவதாகவும் அவ்வாறு அவர் பேசியிருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியுள்ளார்.

ஜெயலலிதா தனது உரை குறிப்பிடத்தக்கது எனினும் ஜெயலலிதாவின் உரையை பத்திரிகைகள் திரித்து வெளியிட்டு விட்டதாக அ. தி. மு. க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**கப்டன் நக்கீரன் / மாமா**

(இராசையா யோகராசா)

பிள்ளையார் கோவிலடி, மயிலிட்டி

பெருமையுற்ற உன் மறைவு
வேராகும் எம் மனதில்
விருட்சமென வளரும்
அந் நிழலில்
தமிழீழம் நிச்சயம் மலரும்.

காங்கேசன்துறை வீதி, இடம்பெயர்ந்த
பருத்தித்துறை. மயிலிட்டி கடற்றொழிலாளர்
(5703) ஒருங்கிணைப்புச் சங்கம்.

## மரண அறிவித்தல்

### திரு. கனகசபாபதி ஐயர் சிவசுந்தரசர்மா

தையிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உருத்திரபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. கனகசபாபதிஐயர் சிவசுந்தரசர்மா 13-8-93 இல் உருத்திரபுரத்தில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி ஐயர், கமலாம்பிகை அம்மா ஆகியோரின் அன்பு மகனும் திருமதி தாட்சாயினி அம்மாவின் அன்புக் கணவரும், சுந்தரதாஸக் குருக்கள், சயனமோகனக்குருக்கள், ஸ்ரீ வனஜா, மதனசொரூபா, லம்போதரா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியை 13-8-93 மாலை 5 மணிக்கு உருத்திரபுரத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

10-ம் வாய்க்கால் திரு சி. சயனமோகனக் குருக்கள்
உருத்திரபுரம், (மகன்)
கிளிநொச்சி. (5704)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.